மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : CC 12/22

பெயர் : சண்முகராஜ் (PW5)

த/பெ. : சுப்பையா

(Accused Periyasamy is present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the30 th day of December 2024

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** ( மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை)( சாட்சிக்கு அவரது முதல் விசாரணை படித்துக் காண்பிக்கப்பட்டது)

1)எங்கள் ஊரில் சுமார் 400 வீடுகள் இருக்கும்.எங்கள் ஊரில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் உள்ளனர்.போலிசார் வந்தபோது 4,5 பேர் இருந்திருப்பார்கள்.நான் கையொப்பம் செய்தபோது 5,6 பேர் இருந்திருப்பார்கள்.நானும் பாஸ்கரும் கையொப்பம் செய்தோம் அதை தவிர வேறு யாரிடம் கையொப்பம் கேட்டார்கள் என்பது எனக்கு தெரியாது.

2)சம்பவ இடத்தில் இருந்து ஏதாவது பொருட்கள் எடுத்தார்கள் என்று நான் பார்க்கவில்லை.மொத்தம் எத்தனை பக்கம் எழுதினார்கள் என்பது எனக்கு தெரியாது.எழுதி வைத்திருந்தததில் என்னிடமும் பாஸ்கரிடமும் கையொப்பம் பெற்றார்கள்.நான் லாரி ஓட்டுனர், அதனால் எனக்கு போலிசார் நல்ல பழக்கம் என்றால் இல்லை.நான் அடிக்கடி ஓட்டப்பிடாரம் வருவேன் என்றால் இல்லை.நான் கையொப்பத்தை காவல்நிலையத்தில் செய்தபோது மணி எத்தனை இருக்கும் என்றால் நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன்.நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் போலிசார் வந்து போனதற்காக கையொப்பம் கேட்டார்கள் செய்து கொடுத்தேன்.நான் ஓட்டப்பிடாரம் காவல்நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் இல்லை.

**மறுவிசாரணை**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.